## 13 வருடங்களுக்கு முன் நடந்த கொடூரம் -பயங்கரம்

# வல்வெட்டித்துறையில் இந்திய அமைதிப் படையினர் 72 மணித்தியாலங்கள் நிகழ்த்திய கோரத் தாண்டவம்

### மிருக வெறிக்கு இலக்காகி இம் மண்ணுக்காக உயிர் நீத்த 63 பொது மக்கள்

ஜாலியன் வாலாபாக் படுகொலைகள் இமைலாய்ப் படுகொலைகள் என்று உலகின் சரித்திரப் பிரசித்தி பெற்ற வரலாற்றுப் படுகொலைகளின் வரிசையில் வல்வெட்டித்துறைப் படுகொலைகளும் இடம்பெற்று விட்டன.1989ஆம் ஆகஸ்ட்2,3,4 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து கண்மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதல்களில் குழந்தைகள்,பெண்கள்,சிறுவர்கள், முதியவர்கள் உட்பட 63 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொடூரம் நிகழ்ந்து 13 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்தால் இன்று தான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது போல் நெஞ்சம் பதறுகிறது. வல்வெட்டித்துறையில் இந்திய அமைதி காக்கும் படையினர் நடத்திய பயங்கரமான நினைவுகள் மனத்தில் இன்றும் அகலாதிருக்கின்றன. இந்தப் பயங்கர கொடுமையை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தி இம் மண்ணுக்காக உயிர்நீத்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

அமைதி காக்க வந்த இந்திய அமைதிப்படையால் வல்வெட்டித்துறையில் துடிக்கத் துடிக்க 63 பேர் கொல்லப்பட்டனர்.125 வீடுகள் மட்டுமல்ல 45 வர்த்தக நிறுவனங்களும் தீயிட்டு கொழுத்தப்பட்டதுடன், 175க்கு அதிகமான கடற்றொழிலாளர் வள்ளங்களும் உபகரணங்களும் எரித்து நாசமாக்கப்பட்டன.

இத்தனை அநியாயங்களுக்கும் துணை போன இந்திய அமைதிப்படையின் யாக்கரை முகாமுக்குப் பொறுப்பான இராணுவ கட்டளை அதிகாரி, இந்திய இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டால் வடமராட்சியின் முழுக்கிராமத்தையும் எரிப்பேன்.நூற்றுக்கணக்கில் சுட்டுத் தள்ளுவேன். இராம-இராவண யுத்தத்தால் இலங்கை எரியும் எங்களை எவரும் எதுவும் செய்து விட முடியாது.நாங்கள் உலகின் நாலாவது பெரிய இராணுவம் எனக் கூறினார்.

இச்சம்பவம் குறித்து லண்டனில் இருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகையின் முன் பக்கச் செய்தியில் இவ்வாறு செய்தி பிரசுரமாகியிருந்தது.''ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினரின் மிக மோசமான ஒரு நடவடிக்கையால் 51 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மூன்று நாட்களாக ஊரடங்கு உத்தரவிடப்பட்டு இந்தப் படுகொலைகள் பற்றிய விபரங்கள் தெரியாதாவாறு இந்தியப் படையினர் மூடி மறைந்துள்ளனர். இந்தத் தாக்குதலில் அந்தக் கிராமத்தையே அழிப்பதற்கு முயற்சி செய்துள்ளதுடன் வைத்தியர் குழுவைக்கூட அங்கு அனுப்ப அனுமதிக்கவில்லை.

வுலவெட்டித்துறையே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த ஊராக இருந்த போதிலும் பல விடுதலைப் புலிப் போராளிகள் இங்கிருந்தே உருவாக்கப்படுவதாலும் பழிவாங்கும் ஒரு செயலாகவே இந்தத் தாக்குதல் பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 51 பேர் கொல்லப்பட்டனர்.

### வீட்டில் இரத்தவெள்ளம்

பெரும்பாலானோர் தமது கைகளையோ கால்களையோ இழந்த நிலையில் காயமடைந்துள்ளனர். இந்த நகரத்தில் பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதால் வல்வெட்டித்துறைப் பகுதி

வனாந்தரம் போன்று காட்சியளிக்கின்றது. 5000க்கும் அதிகமான மக்கள் ஆலயங்கள், பாடசாலைகள், தேவாலயங்களில் தஞ்சம் புகுந்தனர். உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உதவி கோரி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயம் ஆகியவற்றுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இந்தியப்படை விலகிச்செல்லும் என்று கூறிக்கொண்டிருப்பது இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்துக்கு மாறாக இந்தியா தனது படைகளை மேலும் அங்கு வைத்திருப்பதற்கு நியாயம் கற்பிக்க முயல்கின்றது.''என எழுதியிருந்தது.

அந்தக் கொடுமைகளை மீண்டும் நினைவுபடுத்துவதற்கு இந்தச் செய்தியே போதிய சான்றாகும்.

அன்றைய வெறித் தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஒரு பெண் தனது சோகக்கதையை அன்று இவ்வாறு தெரிவித்தார்.

**இலங்கையில் அமைதி காக்கவென்று வந்த இந்திய அமைதிப்படையினரால் 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2,3,4 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் 60க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட பெரும் துயரத்தை நினைவுகூருமாக இக்கட்டுரை**

இந்திய ஜாவானின் மிருகத்தனம்

36 வயதான உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த இந்திரா என்ற பெண் தனது சோகத்தை பத்திரிகையாளர் ஒருவருக்கு கூறுகையில்,நான் சம்பவதினம் அன்று எனது 6 வயது மகனுடன் வீட்டில் இருந்தேன்.எனது கணவர் வேலைக்காக யாழ்ப்பாணம் சென்றவர்,72 மணித்தியால ஊரடங்கால் வீடு திரும்பவில்லை. நானும் எனது வீட்டுக்கு வந்து வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறினார்.நான் வீட்டுக்கு வெளியே வந்து நின்றேன்

ஒரு சிப்பாய் என்னை துப்பாக்கியால் பிடித்துத்தள்ளி அறைக்குள் கொண்டு சென்று மிருகத்தனமாக கொடூரம் புரிந்தான்.எல்லாம் முடித்துவிட்டு கொடூரம் புரிந்த வெறியன் இதனை வெளியில் சொன்னால் சுட்டுத்தள்ளி விடுவேன் என கூறிச்சென்றான்.நான் மற்றைய பெண்களைப்போல தற்கொலை செய்யவோ மூடிமறைக்கவோ போவதில்லை.அந்த வெறிநாய்கள் அமைதிப்படை என்ற போர்வையில் இங்கு செய்யும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தப்போகின்றேன்.என்று வைராக்கியத்துடன் கூறினார்.

**கோரத் தாண்டவம்**

தீருவிலில் புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் நினைவுத்தூபிக்கு அருகில் உள்ள முருகையன் கோயிலடியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒன்றோ, இரண்டோ இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் செயலாகவே இக் கோரத்தாண்டவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட போது மக்களின் சடலங்களை எரிப்பதற்குக்கூட அந்நிய ராணுவம் அனுமதிக்கவில்லை. பல நாட்களின் பின்னர் அழுகிய நிலையில் கிடந்த உடன்பிறப்புக்களை தீயிட்டுக் கொழுத்தினோம். எரிப்பதற்குக்கூட விறகுகள் இல்லை வீட்டில் கிடந்த வாங்கு கதிரைகளை கொத்திப்போட்டு எரித்தோம்.

பெர்னாண்டஸின் குமுறல்…!

இந்தியப் பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ‘‘இந்தியப் படையினரின் வல்வெட்டித்துறைப் படுகொலைகள்’’ என்ற தலைப்பில் வெளியான நூலுக்கு முன்னர் வழங்கிய முன்னுரை இது.

ராஜீவ் காந்தியின் ராணுவ சாகசத்தால் இலங்கை இந்தியாவின் வியட்நாமாக மாறும் என்று நான் 1987 ஆகஸ்ட் ஆரம்பத்தில் சொன்னேன்.அப்போது இந்தியா வியட்நாமிலும் ஒரு மையலாய் இருக்குமொன்று நான் எதிர்பார்க்கவில்லை. ராணுவத்தினர் எங்கும் ஒரே மாதிரியானவர்கள் தான் என்று நான் அறிந்திருந்தேன். மீண்டும் மீண்டும் இதை வலியுறுத்தியிருக்கிறேன். அவர்களது பயிற்சியும் கடுமையான வாழ் முறையும் போர் அவர்களிடம் தூண்டிவிட்ட மிருகத்தனத்துடன் இணைந்து சிக்கலான சமயங்களில் அவர்களை மனிதாபிமானமற்று நடக்கச்செய்கின்றன.

இதனால்தான் ஆரம்பகால இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது கிளம்பிய கற்பழிப்பு, கொலைக் கதைகளை இந்திய அரசின் பிரசாரகர்கள் மறுத்த போதும் நமது இந்திய இராணுவ வீரர்கள் சாரணச்சிறுவர்கள் போல் போர்க்களங்களில் தினமும் நற்காரியங்கள் குறிப்பாக திக்கற்ற அபலைகளுக்கு செய்து கொண்டிருக்கின்றனர் என்ற வாதங்களையும் கேள்விக்குள்ளாக்கினேன்.

இன்று வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் தனது மைலாயை நிகழ்த்தியிருக்கிறது. இந்திய இராணுவம் வல்வெட்டித்துறையில் காட்டிய காட்டுமிராண்டித்தனத்தை பற்றி லண்டனிலிருந்து வெளிவரும் ‘‘டெய்லி டெலிகிராப்’’ தனது தலையங்கத்தில் விமர்சிக்கின்றது.’’இந்த நாசவேலை மைலாயை விடக் கொடுமையானது.அங்கே அமெரிக்கப் படைகள் நிதானமிழந்து வெறியாட்டம் ஆடினர். ஸ்ரீலங்காவின் கிராமத்தில் இந்தியப் படையினர் திட்டமிட்டுச் செயற்பட்டிருக்கின்றனர். ஆட்களைப் படுக்கவைத்து முதுகில் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்.

வேற்றுமை அதுமட்டுமல்ல மைலாய் அமெரிக்கப் பத்திரிகையாளர்களாலேயே உலகின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.மைலாய் பொதுமக்களுக்கெதிரான அமெரிக்க இராணுவத்தினரின் அடாவடிச் செயலை அமெரிக்க மக்கள்-குறிப்பாக பத்திரிகையாளர், மாணவர்கள், இளைஞர்கள் ஒன்று திரண்டு எதிர்த்தனர்.வல்வெட்டித்துறையில் இந்த கோரச்சம்பவம் நடந்து பதின்மூன்று நாட்களுக்குப் பின் அங்கு சென்ற பைனான் ஷியல் டைம்ஸ்(லண்டன்)பத்திரிகையின் டெல்லி நிருபர் டேவிற் ஹவுஸ்கோ இச் சம்பவத்தை அறிந்தார்.இதைப் பற்றிய அவரது செய்தி ஆகஸ்ட் 17அன்று அவரது பத்திரிகையில் வெளியானது.அதற்கு முன்பே ஆகஸ்ட் 13ஆம் திகதி லண்டன் டெலிகிராப் பத்திரிகை டெல்லியிலிருந்த படி தனது நிருபரின் ‘‘ஜெரமி கவ்ரான்’’தொகுத்தனுப்பிய செய்தியை வெளியிட்டது.இந்திய பத்திரிகையாளரின் ஒரு சிறுபகுதியினரே அதுவும் செப்ரம்பர் மூன்றாம் திகதிக்குப் பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸில் ரீட்டா செபஸ்டியன் கொடுத்த செய்தியைத் தொடர்ந்தனர்.

உண்மை என்னவென்றால் வல்வெட்டித்துறை சம்பவம் இந்திய அரசால் திட்டமிட்டு மறைக்கப்பட்டது.இந்தியப் பத்திரிகையாளர்களின் பெரும்பகுதியினர் இதில் கூட்டுச் சேர்ந்து கொண்டு புளாங்கிதம் அடைந்தனர்.இந்தியாவில் இராணுவம் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது.ஆனால் அடாவடித்தனங்களில் ஈடுபடும் போதும் இப்புனிதத் தன்மை மேலும் கூடுகிறது. வடக்குகிழக்கு மாகாணத்தில் இராணுவ உடையில் நம்மவர்கள் நடத்தும்

கற்பழிப்புக்களையும் கொள்ளைகளையும் பற்றி யாரேனும் வாய்திறப்பதுண்டா?ஓயினம் என்ற இடத்தில் நடந்த கேவலத்தை பற்றி கேள்விப்பட்டவர்கள் கூட இந்தியாவில் இல்லை.இராணுவ உடையணிந்த கயவர்களும் வக்கிரம் பிடித்தவர்களும் நடத்திய மிருகத்தனமான செயல் அது.

ஆதிகார வர்க்கத்தையும் இராணுவத் தளபதிகளையும் மக்கள் சக்தி வென்ற போது வியட்நாமும் மைலாயும் முடிவுக்கு வந்தன.

வல்வெட்டித்துறை பற்றிய உண்மைகளை இச்சிறு பிரசுரம் உலக மக்களுக்கு குறிப்பாக இந்திய மக்களுக்கு உணர்த்தும் என நம்புகின்றேன்.இந்திய மக்களின் மனச்சாட்சியை விழிப்படையச் செய்து வல்வெட்டித்துறையில் உயிரிழந்தோருக்காக அவர்களை நீதி கேட்கச் செய்யுமானால் இவ்வெளியீட்டின் நோக்கம் முழுமை பெறும்.

இந்திய இராணுவத்தினர் கதறக்கதறக் சுட்டுக்கொன்றார்களே, இதனை யார் கண்டித்தார்கள்.இந்திய அரசாங்கம் கூட இக்கொடுமையை கண்டித்ததாக இல்லை.இப்படியான அநியாயத்தால் நாம் அடைந்த இழப்பு எத்தனை உறவினரை இழந்தேன்.இத்தனை இழப்புக்களுக்கு மத்தியிலும் நான் நிமிர்ந்து நிற்கின்றேன்.தமிழன் சுயகௌரவத்துடன் தமது தாயகத்தில் நிம்மதியுடன் வாழும் காலம் எப்போது உருவாகுமோ அன்றுதான் விடிவு கிட்டும்.இவ்வாறு அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.